DINAMANI

27 MAY 2021

PAGE 4

# புதிய அரசு மூலம் மக்களுக்கு எல்லா நன்மையும் கிடைக்க வேண்டும்



புதுச்சேரி, மே 26: புதுவையில் புதிய அரசு பதவியேற்றதன் மூலம் மக்களுக்கு எல்லா நன்மைகளும் கிடைக்க வேண்டும் என்று வேண்டுவதாக துணைநிலை ஆளுநர் தமிழிசை செளந்தரராஜன் தெரிவித்தார்.

புதுச்சேரி ஆளுநர் மாளிகையில் புதன்கிழமை நடைபெற்ற நிகழ்ச்சியில், இந்திய தொழில் கூட்டமைப்பு மூலம் லெனோவா நிறுவனம் 10 ஆக்சிஜன் செறிவூட்டிகள், 150 பல்ஸ் ஆக்சி மீட்டர்களை ஆளுநர் தமிழிசை செளந்தரராஜனிடம் வழங்கியது.

புதுச்சேரி சுகாதாரத் துறை, புதுவை பல்கலைக்கழக சமூக பணித் துறையுடன் இணைந்து கரோனாவால் பாதிக்கப்பட்டவர்களுக்கு, தொலைபேசி வழி ஆலோசனை வழங்குவதற்காக தொடங்கியுள்ள 'பகிர்வோமா' என்ற நிகழ்வை ஆளுநர் தமிழிசை தொடங்கி வைத்தார்.

நிகழ்ச்சியின் போது, புதுச்சேரி ஜவஹர் வித்யாலயா பள்ளியின் 5-ஆம் வகுப்பு மாணவர் ஷ்யாம் பிரசன்னா தனது சேமிப்பு பணம் ரூ.2,773-ஐ உயிர் காற்று திட்டத்துக்கு நன்கொடையாக அளித்தார். இளைஞர், குழந்தைகள் தலைமைக்கான அமைப்பு இந்தத் திட்டத்துக்கு ரூ.1.2 லட்சம் நன்கொடையாக வழங்கியது.

அப்போது, ஆளுநர் தமிழிசை செளந்தரராஜன் செய்தியாளர்களிடம் கூறியதாவது:

புதுவையில் புதிய சட்டப்பேரவை உறுப்பினர்களாக பதவியேற்றவர்களுக்கு வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கிறேன். புதிய அரசு புதவியேற்றதன் மூலம் மக்களுக்கு எல்லா நன்மைகளும் கிடைக்க வேண்டும் என்று வேண்டுகிறேன்.

கரோனாவால் பாதிக்கப்பட்டவர்களுக்கு மன நல ஆலோசனைகளை வழங்க 'பகிர்வோமா' என்ற திட்டம் தொடங்கப்பட்டுள்ளது. 104 எண்ணை தொடர்பு கொண்டால், மனநல ஆலோசனை வழங்கப்படும். உடல் நலத்துக்கும், உதவி வாகனங்களுக்கும் தொடர்பு கொள்ளலாம். கரோனா காலத்தில் குடும்ப அட்டைக்கு ரூ.3 ஆயிரம் வழங்குவது மக்களுக்கு பலன் தரும் என்றார் அவர்.

DINA THANTHI

27 MAY 2021 PAGE 9

PAGE 9



கொரோனாவால் பாதிக்கப்பட்டவர்களுக்கு தொலைபேசி வழி ஆலோசனை வழங்கும் 'பகிர்வோமா' என்ற திட்டத்தை கவர்னர் தமிழிசை சவுந்தரராஜன் தொடங்கி வைத்தபோது எடுத்த படம்.

# புதிய அரசால் மக்களுக்கு எல்லா நன்மைகளும் கிடைக்க வேண்டும்

## கவர்னர் தமிழிசை சவுந்தரராஜன் விருப்பம்

புதுச்சேரி, மே.27-

புதிய அரசால் மக்களுக்கு எல்லா நன்மைகளும் கிடைக்கவேண்டும் என்று கவர்னர் தமிழிசை சவுந்தரராஜன் விருப்பம் தெரிவித்துள்ளார்.

### ஆக்சிஜன் செறிவூட்டிகள்

புதுச்சேரியில் கொரோனா நோயாளிகளுக்கு உதவும் வகையில் சமூகப் பங்களிப்பு திட்டத்தின் கீழ் பல்வேறு தனியார் நிறுவனங்கள் மருத்துவ உபகரணங்களை அரசுக்கு வழங்கி வருகின்றன. அந்த வகையில் கவர்னர் மாளிகையில் இந்திய தொழில் கூட்டமைப்பின் மூலம் (லெனோவா நிறுவனம்) 10 ஆக்சிஜன் செறிவூட்டிகள் மற்றும் 150 பல்ஸ் ஆக்சி மீட்டர்கள் கவர்னர் தமிழிசை சவுந்தரராஜனிடம் வழங்கப்பட்டது. அவை சுகாதாரத்துறை செயலர் அருணிடம் ஒப்படைக்கப்பட்டது.

புதுவை ஜவகர் வித்யாலயா பள்ளியின் 5-ம் வகுப்பு மாணவன் ஷியாம் பிரசன்னா தான் சேமித்து வைத்திருந்த ரூ.2,773-ஐ உயிர்காற்று திட்டத்துக்கு நன்கொடையாக அளித்தான். அவனுக்கு

வோமா' என்ற திட்டத்தை கவர்னர் தமிழிசை சவுந்தரராஜன் தொடங்கிவைத்தார்.

அப்போது அவர் நிருபர்களிடம் கூறியதாவது:-

புதுச்சேரியில் புதிய சட்டப்பேரவை உறுப்பினர்களாக பதவியேற்று கொண்டவர்களுக்கு எனது வாழ்த்துகளை தெரிவித்துக்கொள்கிறேன். புதிய அரசால் மக்களுக்கு எல்லா நன்மைகளும் கிடைக்க வேண்டும். தற்போது 'பகிர்வோமா' என்ற திட்டம் தொடங்கப்பட்டு உள்ளது. இதன் மூலம் 104 என்ற தொலைபேசி எண்ணை அழைத்து மனநல ஆலோசனை பெறலாம். மேலும் உடல் நலத்துக்கும், வாகனங்களுக்கும் தொடர்பு கொள்ளலாம்.

தற்போது கொரோனா தொற்று பாதிப்பு குறைய தொடங்கி உள்ளது. கொரோனா இல்லாத புதுச்சேரியாக மாற வேண்டும். அனைவரும் தடுப்பூசி எடுத்துக்கொள்ளுங்கள். மக்கள் வெளியே சுற்றுவதை தவிர்க்க வேண்டும். மக்களுக்கு ரூ.3 ஆயிரம் நிவாரணம் வழங்க அறிவிக்கப்பட்டு உள்ளது. இந்த தொகை பயனுள்ளதாக இருக்கும் என்று நான் நம்புகிறேன்.

இவ்வாறு அவர் கூறினார்.